COUNT US IN 2020

There's Power In Being Counted

ASIAN AMERICANS ADVANCING JUSTICE

COUNTUSIN2020.ORG

# மக்கள் தொகை கணக்கெடுப்பு இரகசியத்தன்மை

ஐக்கிய அமெரிக்காவில் (USA) வாழும் அனைத்து மக்களும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

- பள்ளிகள், சுகாதாரம், மற்றும் உங்கள் பகுதிக்கு தேவைப்படும் பிற அத்தியாவசியமான சேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியின் அளவை மக்கள் தொகை கணக்கெடுப்பு பாதிக்கிறது -- மக்கள் தொகை கணக்கெடுப்பில் உங்கள் சமூகத்தில் மக்கள் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டால், உங்கள் சமூகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு கிடைக்கும்.
- ***மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு நீங்கள் பதிலளிக்கும்போது, உங்கள் குடும்பமும் சமூகமும் தங்களுக்குரிய நியாயமான நிதி ஒதுக்கீடு, சேவைகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதை உறுதிசெய்ய நீங்கள் உதவுகிறீர்கள்!***

மக்கள் தொகை கணக்கெடுப்பில் உங்கள் குடும்பத்தில் வசிக்கும் ஒவ்வொரு நபரைப் பற்றியும், அவரது வயது, பெயர், இனம் மற்றும் இனக்குழு போன்ற அடிப்படைக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. **2020 மக்கள் தொகை கணக்கெடுப்பில் குடியேற்றம் அல்லது குடியுரிமை பற்றி கேட்கப்பட *மாட்டாது.***

## உங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு பதில்கள் முற்றிலும் இரகசியமானவை.

- ❖ உங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு பதில்களின் இரகசியத்தன்மை மிக வலிமையான சட்ட விதிகள் மூலம் பாதுகாக்கப்படுகின்றது.
- ❖ உங்கள் தனிப்பட்ட தகவல்களை ICE, காவல்துறை அல்லது வேறு ஏதாவது அரசாங்க முகமைகள் உள்ளிட்ட யாருடனும் பகிர்வதற்கு மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகத்துக்கு அனுமதி இல்லை.
- ❖ உங்கள் நகரத்தில் எத்தனை பேர் வசிக்கிறார்கள், மற்றும் அவர்களின் வயது, பாலினம் மற்றும் இனம் பற்றிய புள்ளிவிவரங்கள் போன்ற மக்கள் தொகை பற்றிய பொதுவான தகவல்களை உருவாக்குவதற்கு மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் உங்கள் பதிலைப் பயன்படுத்த முடியும். ஒரு தனிப்பட்ட நபராக உங்களைப் பற்றிய தகவல்களை மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் பகிர முடியாது.

சட்டதின் படி ஒவ்வொருவரும் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு முழுமையாகவும், எல்லாக் கேள்விகளுக்கும் உண்மையாகவும் பதிலளிக்க வேண்டும். பொய்யான தகவல்களைத் தெரிவிக்கக் கூடாது.

உங்கள் பெயர் மற்றும் முகவரியை நீங்கள் அளித்திருந்தால், ஒன்றிரண்டு கேள்விகளுக்கு நீங்கள் பதில் அளிக்காமல் விட்டிருந்தாலும் கூட உங்கள் படிவம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். நீங்கள் கேள்விகளைத் தவிர்த்திருந்தால் அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பதில் அளிக்காமல் இருந்தால், விடுபட்ட தகவல்களை தொலைபேசி வாயிலாகவோ அல்லது உங்கள் வீட்டிற்கு ஒரு மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகத்தின் ஊழியரை அனுப்பியோ விடுபட்ட தகவல்களைக் கேட்பதற்கான தொடர் நடவடிக்கைகளை மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் எடுக்கும். மிகச் சில கேள்விகளை மட்டுமே நீங்கள் தவிர்த்திருந்தால், மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் அதன் மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு.

*மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய கூடுதல் தகவல்களைக் காண, www.countusin2020.org/resources*-ஐப் பார்வையிடுங்கள்.